DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.98/2023**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சந்திரன் | | |
| த/பெ | : எட்டியப்பன் | மதம் | |
| கிராமம் | : கள்ளிக்குப்பம் | தொழில் | கட்டிட ஒப்பந்ததாரர் |
| வட்டம் | : சென்னை | வயது | 55/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 11.11.2025**

**குறுக்கு விசாரணை: PW1**

1. நான் கல்வி படிக்காததால் ஆங்கிலம், தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் தற்பொழுது கள்ளிக்குப்பம், அம்பத்தூரில் வசித்து வருகிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் வீராபுரம் மோரையில் வசித்து வந்தேன். நான் தாக்கல் செய்த வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதியும் புரிந்து தெரிந்து தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக 8 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அதை தவிர்த்து வேறு ஆவணங்கள் ஏதேனும் என் வசம் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கை நிரூபிக்க எனது தரப்பில் வேறு சாட்சி யாராவது உள்ளார்களா என்றால் இல்லை. நான் கட்டிட ஒப்பந்ததாரராக வேலை பார்த்து

வருகிறேன். எனக்கு கீழ் 4 நபர்கள் வேலைக்கு வைத்து கட்டிட தொழில் செய்து வருகிறேன். என்னிடம் PAN Card உள்ளது வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. என்னிடம் எத்தனை வங்கி கணக்கு உள்ளது என்றால் பேங்க் ஆப் பரோடா வங்கி கணக்கு மட்டும் தான் உள்ளது. வியாபார பரிவர்த்தனைகள் எவ்வாறு நடந்து வரும் என்றால் வங்கி மூலமாகவும், பணபரிவர்த்தனை நடக்கும் சிலர் ரொக்க பணமாகவும் தருவார்கள். கட்டிட ஒப்பந்ததாரர் வேலை தவிர வேறு வியாபாரம் ஏதேனும் செய்து வருமானம் ஈட்டி வருகிறேனா என்றால் இல்லை. எனக்கு கடன் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிரியிடம் கடைசியாக எப்போது பேசினேன் என்றால் தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை, பணம் திருப்பி கேட்டபோது எதிரியின் கணவர் என்னை அடிக்க வந்தார், அப்போது தான் எதிரி காசோலை கொடுத்தார். அச்சம்பவம் கள்ளிக்குப்பம் டீக்கடையில் வைத்து நடந்தது. எதிரி இதற்கு முன்பாக என்னிடம் கடன் ஏதும் வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் எதிரி எனது உறவினர் ஆவார். எதிரி வாங்கும் பணத்தை திருப்பி தர போதிய வருமானம் உள்ளதா என்று பார்த்து கடன் கொடுத்தேனா என்றால் HVF ஆவடியில் எதிரி டெய்லராக வேலை பார்த்து வருகிறார். எதிரியின் கணவரின் அக்கா புஷ்பா என்பவரை தெரியுமா என்றால் தெரியும் புஷ்பா என் உறவினர் ஆவார். புஷ்பாவுக்கும் எதிரிக்கும்

அம்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் சொத்து மற்றும் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரியும் நானும் துக்கங்களிலும் சந்தோஷ நிகழ்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். எதிரியின் தம்பி பெயர் தெரியாது. அவர் கல்யாணத்திற்கு சென்று சாப்பிட்டு வந்தேன். திருமணத்தில் சைவ, அசைவ உணவு போட்டார்களா என்றால் திருமணத்தில் நான் உணவு உண்ணவில்லை. எந்த திருமண மஹாலில்  திடிருமணம் நடந்தது என்றால் திருவேற்காட்டில் நடந்தது மஹால் ஞாபகம்  இல்லை. திருமணம் நடந்த வருடம் 2023 மாதம், தேதி ஞாபகமில்லை. எந்த காரணத்திற்காக எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றால் தம்பி திருமண செலவிற்காக கேட்டிருந்தார்.  நான் கூறுவது போல் 2023 ல் எதிரியின் தம்பிக்கு திருமணம் நடக்கவில்லை என்றும், 2021 ல் திருமணம் நடந்ததற்கு திருமண அழைப்பிதழ் வழக்கறிஞர் புகார்தாரரிடம் காண்பித்தார் அதை எதிரி தரப்பு சாட்சியம் சமயம் எதிரி தரப்பு ஆவணமாக குறியீட செய்து கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. எதிரி 2021 டிசம்பர் மாதத்தில் பணம் கேட்டதாக புகாரில் தெரிவித்திருந்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் யார் முன்னிலையில் பணம் தரப்பட்டது என்றால் தேதி நினைவில்

இல்லை மாலை 6.00 மணியளவில் புஷ்பா முன்னிலையில் பணம் கேட்கப்பட்டது. புஷ்பா முன்னிலையில் தான் பணம் கேட்டதாக எனது புகார் மனு, பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. புஷ்பாவை இவ்வழக்கில் சாட்சியாக பட்டியல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சார்பாக புஷ்பா சாட்சியளிக்க அழைத்து வர முடியுமா என்றால் இல்லை. எதிரிக்கு பணம் கொடுத்ததை நிரூபிக்கும் பொருட்டு புஷ்பாவுக்கும் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் பத்தி 3ல் கடன் தொகை ரூ.4,00,000/– கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் அது எந்த தேதியில் யார் முன்னிலையில் எவ்வாறு தரப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எவ்வாறு எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் ஒரே நாளில் ரொக்க பணமாக தரவில்லை. எந்த தேதிகளில் எவ்வளவு தொகை எதிரிக்கு தரப்பட்டது என்று எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை, எனக்கு எழுத படிக்க தெரியாது. மேற்படி சங்கதிகள் எனது புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எத்தனை தவணையாக ரூ.4,00,000/– எதிரிக்கு தந்தேன் என்றால் 2 தவணையாக கொடுத்தேன். பணத்தாள்கள் எந்த வகையில் தரப்பட்டது என்றால் தெரியாது. 3 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக கேட்டதின் பேரில் தான் எதிரிக்கு பணம் தருவதாக தெரிவித்தேன் என்றால் சரிதான். கடன்

கொடுத்த தேதியில் இருந்து 1 ஆண்டு காலம் கழித்து தான் காசோலை தரப்பட்டது, இதற்கிடையே எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் தந்தேனா என்றால் இல்லை. எதிரி வாங்கிய கடனில் இருந்து ரூ.13,000/– திருப்பி ரொக்க பணமாக கையில் கொடுத்தார் அத்துடன் இவ்வழக்கின் காசோலை கொடுத்தார். எந்த தேதியில் யார் முன்னிலையில் ரூ.13,000/– கொடுத்தார் என்று புகார் மனு பத்தி 7 ல் கூறவில்லை என்றால் சரிதான். 2022 ல் வீராபுரத்தில் வசித்து வந்தேன். 07.12.2022 ஆம் தேதி காசோலை கொடுத்ததாக என் புகார் மனுவில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான், எதிரி நேரடியாக வந்து தான் காசோலை கொடுத்தார். அந்த காலகட்டத்தில் எதிரி நோயால் பாதிக்கப்பட்டு நடமாற்றம் இல்லாமல் இருந்தார் என்றால் தெரியாது.

எதிர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K